DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.1/2018**

Deposition of witness for Prosecution அ.சா.3

Name : ராஜேந்திரன்
Father/ Husband Name : கருப்பையா
Village :
Taluk :
Calling :
Age :

எதிரிகள் ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 07.08.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது நாட்டார்வழியில் குடியிருந்து விவசாய வேலை பார்த்து வருகிறேன். கடந்த 3-ம் தேதி 2016-ம் ஆண்டு ஆறாவயல் காவல் நிலைய போலீசார் பட்டியல் சாட்சி 1 வீட்டில் திருடு நடந்தது தொடர்பாக போலீசார் விசாரணை செய்தனர். சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி பார்வை மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. போலீசார் செல்போனில் போட்டோ எடுத்தார்களா, கேமராவில் போட்டோ எடுத்தார்களா என்றால் செல்போனில் போட்டோ எடுத்தார்கள். செல்போனில் போட்டோ எடுத்ததற்கு தான் என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் ஆமாம். நான் வெள்ளை பேப்பரில் கையெழுத்து போட்டேனா என்றால் இல்லை எழுதியிருந்த பேப்பரில் தான் கையெழுத்து போட்டு கொடுத்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

2. பட்டியல் சாட்சி 1 சண்முகராஜா எனது நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். அவர் என் நெருங்கிய உறவினர் என்பதால்

போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து செய்து கொடுத்து விட்டு அதுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.